806

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 AUG 1955
MADRAS
806
3-55

ஆசிரியர்: இளவழகனார்

கிளை—7 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத, ஆடி, ௧௩ 29—7—55 தளிர்-43

## குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

# தொடர்ந்த முயற்சி

'தொடர்ந்த முயற்சி' என்பது, தொடர்பாக மேற்கொள்ளும் ஒழுக்கமாகிய நன்னடைத்தை! இந்த நற்போக்கு, மேற்கொண்ட நன்னோக்கை அடைவிக்கும். இதுதான் வாழ்க்கை உயர்வு என்பது.

தொடர்ந்த நற்போக்காகிய ஒழுக்கமிலான்கண் இவ்வுயர்வு எங்ஙனம் உண்டாகும்? அதனாலேதான், 'இல்லை ஒழுக்கமிலான்கண் உயர்வு' என்றார் ஆசிரியர்.

இனி மக்களிடத்தில் இவ்வொழுக்கம் இல்லாமற்போவதற்கு என்ன காரணம் என்பதிலும் ஆசிரியரது நினைவு கூர்ந்து செல்லுகின்றது. தடைகண்டு விலக்கவேண்டுமன்றோ!

தீய நினைவுகள் உள்ளத்தைக் கவர்ந்து ஈர்த்துச் செல்லுவதலே அதற்குக் காரணம்! அப்படி ஈர்ப்புண்டு போகாமல் இருப்பதற்கே தொடர்ந்த நற்பழக்கம் உதவியாயிருக்கின்றது. அதனாலேதான் உவமமும் பொருளும் இத் திருக்குறளில் அழுக்காறும் ஒழுக்கமுமாக வந்தன.

புறத்தீமைகளை விட அகத்தழுக்குகள் கொடியவை; அகத்தழுக்குகளில் மிகக் கொடியது அழுக்காறு; உள்ளத்தை அது தொட்டுவிட்டால் மீள்வது அரிது; எப்படியும் தன் வழியே ஈர்த்து வாழ்வை அது பாழாக்கிவிடும்; வறுமைப்படுத்திவிடும்.

அகத்து நன்மைகளில் உயர்ந்தது நல்லாறு; அதாவது தொடர்ந்த நன்னடத்தை; அழுக்காறுடையான்கண் நன்னினைவு பறிபோதலால் ஆக்கம் இல்லாதவாறுபோல, தொடர்ந்த நன்னடத்தையாகிய ஒழுக்கம் இல்லாதவனிடமும் நெஞ்சு நினைவு தடுமாறி ஆற்றலழிந்து இறங்குமுகங் கொள்ளுதலால் உயர்வு இல்லையாயிற்று

வாழ்க்கையில் ஒரு நன்னோக்கத்தை உறுதியாக வைத்து அதன் வெற்றிக்கேற்ற நல்வழிகளில் தொடர்பாக ஒழுக்கங் கொள்ளுதலே உயர்வுக்கு நல்லது என்றபடி.

அழுக்கா றுடையான்கண்
ஆக்கம்போன் றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று—பிறர் ஆக்கம் கண்டு மனப் பொறாமை உடையவனிடம் ஆக்கம் உண்டாகாமை போல, இல்லை ஒழுக்கம் இலான்கண் உயர்வு—ஒழுக்கம் இல்லாதவனிடம் வாழ்க்கை உயர்வு இல்லை.

தான் செல்வத்தைப் பெருக்கும் நினைவை விடுத்துப் பிறன் ஆக்கங் கண்டு பொறாமைப்படுதலில் மனத்தைச் செலுத்துதலால், அழுக்காறுடையான்கண் ஆக்கம் இல்லை; அவனால் அவன் சுற்றமும் நினைவு தவறவும் அவன் உதவி பெறாமற் கெடவும் இடமாதலால், "அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்" என்று சுற்றமும் கெடுதலை வேறிடத்துங் கூறினர்.

இதற்குக் காரணம், அழுக்காறுடையார்க்கு நெஞ்சம் அழுக்காற்றிலேயே தொடர்ந்து ஈர்ப்புண்டுபோதல்! அக் காரணத்தினாலேயே ஒழுக்கமில்லான்கண்ணும் உயர்வு இலதாயிற்று. ஒழுக்கமென்பது தொடர்ந்த நன்னடையாதலின், அஃதில்லார்க்கு உயர்வு இல்லை என்றார்.

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**7-ம் ஆண்டுக் கையொப்பம்**

**(8-10-54 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |

ஆயுள்—

| | | | | |
|---|---|---|---|---|
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| மலர் 7 | மன்மத, ஆடி, 29-7-55 வெள்ளி. | தளிர் 43 |
|---|---|---|


# வறுமையின் விளைவு

கொலையைக் கடிந்து கூறப்புகுந்த திருவள்ளுவர் கொலையின் காரணம் பலவற்றையும் எண்ணினார். போர்களால் நடைபெறும் கொலைகளை எண்ணினார்; கொள்ளை முதலியவைகளால் நடக்கும் கொலைகளை எண்ணினார்; தனிப்பட்ட வகையில் மக்களுக்குள் பகை மூண்டு அதனால் நடக்கும் கொலைகளையும் எண்ணினார்; வயிற்றுப் பசியைத் தணிக்க உணவு தேடி மற்ற உயிர்களைக் கொல்லும் கொலைகளையும் எண்ணினார்; உயிர் உடனே நீக்காவிட்டாலும் அதற்கு நிகரான துன்பங்களைச் செய்து வருத்தும் கொலை போன்ற கொடுஞ் செயல்களையும் எண்ணினார். எல்லாக் கொலைகளுக்கும் அடிப்படையில் ஒரு பெருங் குறை இருப்பதாக உணர்ந்தார். அது என்ன குறை? உயிர்களைப் படைத்த செம்பொருள் அவற்றின் வாழ்க்கைக்கு வேண்டிய உணவு முதலியவற்றையும் குறைவறப் படைத்திருக்கின்றது. அவற்றை எல்லாருக்கும் பொதுவாகக் கருதித் தம் தம் பசிக்கு வேண்டியவாறு பகுத்து உண்டு வாழ மக்களால் முடியும். அவ்வாறு செய்வார்களானால் எல்லோரும் வாழலாம்; மக்கள் தாம் வாழ்வதுடன் மற்ற உயிர்களையும் வாழ்விக்கலாம். அதனாலேயே எல்லா அறநூல்களும் பகுத்துண்டு வாழ்வதை எடுத்துக் கூறி வற்புறுத்துகின்றன. ஆனால் வாழ்வில் தன்னலம் வேரூன்றியிருப்பதால் மக்கள் அவ்வாறு பகுத்துண்ணும் அறத்தைப் போற்றத் தவறுகின்றார்கள். ஒரு நாட்டில் வாழ்விற்குரிய பொருள்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன; மற்றொரு நாட்டில் குறைவாகக் கிடைக்கின்றன. ஆகையால் ஒரு நாடு மகிழ மற்றொரு நாடு வருந்துகின்றது. இல்லாத நாடு இருக்குமிடத்திலிருந்து பெற்றுவாழ முயல்கின்றது. முயற்சிக்குத் தடை ஏற்படுகின்றது. தடையைக் கடக்க வேண்டும் என்ற நெருக்கடி உண்டாகின்றது. அதுவே போருக்குக் காரணமாகிப் போர் நடக்கின்றது. நூறாயிரக் கணக்கான கொலைகள் நடைபெறுகின்றன. இவ்வாறே கொள்ளை முதலியவற்றில் நிகழும் கொலைகளுக்கும் பொருட்குறைவாகிய வறுமையே காரணமாக நிற்கின்றது. மக்களுக்குள் தனிப்பட்ட வகையில் பகை மூள்வதற்கும் கொலை நிகழ்வதற்கும் பெரும்பாலும் வறுமைத் துன்பம் அடிப்படைக் காரணமாக இருக்கின்றது. காய் கனி கிழங்கு கூலம் முதலியவற்றைப் போதிய அளவு பெறமுடியாத குறையாலோ போதிய அளவு விளைக்க முடியாத காரணத்தாலோ, தக்க வகையில் பயன்படுத்தத் தெரியாத அறியாமையாலோ மற்ற உயிர்களை உணவுக்காகக் கொல்லும் கொலையும் நிகழ்கின்றது.

இவைபோலவே வறுமையால் நிகழும் வேறு கொலைகளும் உள்ளன. உலகத்தில் உள்ள விபசாரத்தில் பெரும் பங்கு, பொருளுடையவரின் மயக்க வலையில் பொருளில்லாதவறியவர் விழுந்து அகப்பட்டுக் கொள்வதால் நிகழ்வதாகும். இதைக் கற்புக் கொலை எனலாம். உலகத்திலுள்ள அறியாமையில் பெரும் பங்கு, கற்பதற்குரிய பொருள்நிலை வறியவர்க்கு இல்லாத குறையால் நேர்வதாகும்; 'அறிவினை நீக்கும் நிரப்புக் கொன்றாங்கு' (532) என்று திருவள்ளுவரே கூறியுள்ளார்; இதை அறிவுக் கொலை எனலாம். மானம் கெட்டு வாழ்வோரில் பெரும்பாலோர் வறுமை காரணமாக வழுக்கி விழுவோரே ஆவர்; இதை மானக் கொலை எனலாம். வறுமையின் நெருக்கடி தாங்கமுடியாமல் பலர் ஒழுக்கக் கேட்டிற்கு ஆளாகின்றனர். இதை ஒழுக்கக் கொலை எனலாம். வறுமைத் துன்பம் பலகாலும் வருத்துவதால், உள்ள அன்பையும் பலர் துறந்து விடுகின்றார்கள்; இதை அன்புக் கொலை எனலாம். இவ்வாறே உயிர் இருக்கும்போதே பண்புகளைக் கொன்று கொன்று நடைப்பிணமாக்குவதற்கும் வறுமை காரணமாக இருக்கின்றது. இத்தகைய அமைதியான கொலைமுதலாகக், கருவி கொண்டு உயிர்களைக் கொல்லும் கொடுமையான கொலைவரையில், எல்லாக் கொலைகளும் படைப்பின் அரிய நோக்கத்தைப் புறக்கணிப்பதால் விளைவன என்று உணர்ந்தே திருவள்ளுவர் அதை வலியுறுத்துகின்றார்; கொல்லாமை என்ற அதிகாரத்தில் பகுத்துண்டு பல உயிர்களையும் காக்க வேண்டிய அறத்தை அறிவுறுத்துகின்றார். அறநூலோர் தொகுத்துக் கூறிய அறங்கள் பலவற்றிலும் தலையான அறம், உள்ளவற்றைப் பகுத்து உண்டு பல உயிர்களையும் காக்கும் அறமே என்று தெளிவிக்கின்றார்:

பகுத்துண்டு பல்லுயிர்
ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.
(322)

(திருவள்ளுவர் பக்: 397–9)

—டாக்டர் மு. வரதராசனார்

# * வள்ளுவம் வாழ்வதேன்? *

(தி. பாலசுப்பிரமணியன்)

அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவு எங்குன்றம் என்ற அற்றைய நிலை கூறி இன்று எதுமற்றுள்ளோமே என்று ஔவையைக் கண்ட பாரி மகளிர் கூறுவதைப்போலக் கற்றறிந்த மேதைகள் அன்று அவனியாண்ட தமிழ் அகில உலகும் போற்றிப் புகழ்ந்த பண்டைய தமிழர் நாகரிகம் இன்றுற்ற தாழ் நிலை கண்டு மனம் கலுழ்கின்றனர் பிறமொழி பிறநாட்டு நாகரிக மோகங்கொண்டோர் பலர் தமிழால், தமிழ் நாட்டையேனும் ஆள முடியுமா ஆளும் திறனுண்டா பண்புண்டா என்ற ஐய வினாக்களை எழுப்புகின்றனர். முடியும் என்பாரைக் கேலி செய்கின்றனர் அவர்கள் அறியாமை என்னே! இவர்களை யொத்த மதியிலிகளின் துணை கொண்டும் கடற்கோள் போன்ற இயற்கையின் சதியாலும் பல பண்டைய அரிய தமிழ் நூல்கள் அழிக்கப்பட்டன நாகரிகமும் அழிந்தது. அறிவும் அடகுவைக்கப்பட்டது.

தண்டமிழ்த்தாய் படைத்த அத்தனையும் தலைச் செல்வங்களே தவிர அவம் ஒன்று கூட இல்லை பாலோடளாய நீர் பாலாவதொப்ப, குற்றியடைந்த புல் உழவர் உழுபடைக்கு ஒல்காவே யாகும் என்பது புரைய, வெண்ணிலவிலுள்ள கருநிறக் களங்கமும் சான்றோரால் வணங்கப்படுவதை மான, செந்தமிழோடு சேர்ந்தபிறவும்பெருமைபெற்றன என்று கூறுதல் மிகையாகாது. அடலேறன்ன, அரசர்களையும் நல்வழிப்படுத்தி நேர்வழிச்செல்ல வழிகாட்டியது பைந்தமிழ்தான் பைந்தமிழ்ப் பாவை பயந்த செல்வங்கள்தான் அச் செல்வங்களை அளித்த கபிலனை யொத்த புலவர்கள்தாம். புராணவழியிற் காணும் தமிழ் எலும்பைப் பெண்ணாக்கியது; முதலையுண்ட பாலனை அழைத்தது; மூடிய மறைக்கதவைத் திறந்தது இன்னும் பல

உலகத்தையே கூட ஒரு குடைக்கீழிருந்து ஆள ஒரு சட்டபுத்தகம் தேவையெனின், காதலர் காதல் வாழ்வு நடாத்த வழி காணும் நூல் தேவையெனின், இல்லறத்தான் எத்தன்மையில் வாழவேண்டும் என்ற வரையறை தேவையெனின், இவையனைத்தையும் ஒருங்கே கொண்டு மிளிரும் திருக்குறளைக் கொள்ளல் சால்புடைத்து உலகில் உள்ள அனைத்தும் இதன்பால் உள. இதில் இல்லாதது உலகில் ஒன்றுமே இல்லை என்பது கற்றறிந்த பெரியோர் கண்டு கூறும் உண்மை வள்ளுவம் வாழ்வதன் உட்காரணமே, எல்லோரும் அவ்வவர்களைச் சார்ந்தது என்ற உரிமை கொள்ளக்கூடிய அரிய சக்தியும் உண்மைத் தத்துவமும் அமைந்திருப்பதேயாகும்.

கோளில் பொறியில் குணமிலவே
எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

என்பதைக் காணும் மதவாதியும்,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

என்பதைக் காணும் இல்லறத்தானும்,

வேலன்று வென்றி தருவது
மன்னவன்
கோலதூஉங் கோடாதெனின்.

என்பதைக் காணும் அரசியல் வாதியும்

ஊடுதல் காமத்திற் கின்பம்
அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

என்பதைக் காணும் காதலுள்ளங்களும், இதனை யொத்த பலவற்றைப் பல நிலையிலே நின்று காணும் பல்லோரும் இவற்றிற்கீடான எடுத்துக்காட்டு மற்றெங்கும் காணமுடியாத நிலைகண்டு அத்தகு நிலையிலுள்ள இதனைப் போற்றுகின்றனர் ஆகவே வள்ளுவம் வாழ்கிறது. வாழும் வள்ளுவத்தை வாழ்த்துகிறோம் வையம் அதன் முழுப்பயனையும் பெறுவான் வேண்டி.

இம் மலர் பூக்கும் நன்னாளில் நாம் எடுக்கவேண்டிய சூளுரை, படித்தார்க்கும் உயர்ந்தார்க்கும் இடையேயுள்ள வள்ளுவம் படியாதாரிடமும், பட்டிதொட்டிகளிலேயும் வாழ வழி செய்ய வேண்டுமென்பதே. இவ்வெண்ணத்தை ஈடேற்ற முல்லைக் கொடியாள் அணை செய்வாளாக!

## உலக இலக்கியத்திலே

"அன்பை அடித்தளமாகக் கொண்ட தொண்டு வளர்ந்து உயர்தல் வேண்டும்; ஒழுக்கமே மக்களுடைய உயர்ந்த குறிக்கோளாக இருக்க வேண்டும்" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறியிருக்கிறார். ஒவ்வொருவரும் தமக்குத்தாமே செய்து கொள்ள வேண்டிய கடமை என்ன? மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை என்ன? என்பனவற்றைப் பற்றியும் அழகாக வள்ளுவர் பேசுகிறார் உலக இலக்கியத்திலே இவ்வளவு சிறந்துயர்ந்த ஞானம் வேறெந்த நூலிலும் கூறப்படவில்லை எனலாம். —அல்பேர்ட் சுவைட்சர்

(இந்திய சிந்தனை)

# கண்கள்

'கண்ணிற் சிறந்ததோர் உறுப்பில்லை' என்றார் ஒரு புலவர். 'கற்றவர் முகத்திலிருப்பவையே கண்கள்; மற்றவர் முகத்திலிருப்பவை புண்கள்' என்றார் திருவள்ளுவர். அவரே, 'நுண்ணறிவுடையோருக்குப் பிறர் கருத்தினை அளக்கும் கோலாகத் துணை செய்வன கண்களே' என்று கூறுகிறார்.

கண்களை வேண்டுபவர் பலர். ஏன்? மக்களெல்லாம் கண்களோடு இருக்க விழைபவர்களே. கண்கள் இல்லாவிட்டால் உலகம் ஏது? வாழ்வுதான் ஏது?

இத்துணைச் சிறப்பு வாய்ந்த கண்களைத்தான் தலைவி ஒருத்தி பழிக்கிறாள், இழித்துப் பேசுகிறாள்—ஏன்? சபிக்கவும் செய்கிறாள். யார் அந்தத் தலைவி? கண்களைப் பழிக்கும் அவள் யார் என்று கேட்கின்றீர்களா? இதோ திருவள்ளுவர் படைத்த தலைவியைப் பாருங்கள். அவள் வாயிலிருந்து வெளி வரும் சொற்களைக் கேளுங்கள் அவள்தான் கண்களைப் பற்றி அவ்வாறு பேசியவள்.

"தலைவன் யாரென்று எனக்குத் தெரியாது. அவர் எப்படிப்பட்டவர் என்பதையும் யானறியேன். என்னுடைய கண்களே அவரைக் கண்டன; அவரை நான் அறியும்படி செய்தவையும் அவையே! நான் அவரை அன்று கூடி இன்று பிரிந்து துன்புறுதற்குக் காரணமாக இருப்பவையும் அவையே! இவை அன்று எனக்கு அவரைக் காட்டியிராவிட்டால் நான் அவரைக் கண்டிருக்கமாட்டேன். கலந்திருக்க மாட்டேன். இன்று பிரிந்தும் துன்புற்றிருக்கமாட்டேன். அவரை அன்று எனக்குக் காட்டின. இன்று அவரைக் காணப் பெறாது அழுகின்றன என்னைப் பார்த்துக் காட்டு! காட்டு! என்று அழுகின்றன. நான் எவ்வாறு காட்ட முடியும்? அவைகள் காட்டினால்தானே நான் பார்க்க முடியும்? ஏன் இவைகள் இப்படி அழுகின்றன."

"எந்தச் செயலையும் நன்றாக ஆராய்ந்துதானே செய்யவேண்டும். அப்படி ஆராய்ந்து செய்திருந்தால் இப்படிப்பட்ட துன்பம் வந்திருக்குமா? ஆய்ந்தாய்ந்து நட்புக் கொள்ளாது இப்போது வருந்துவதேன்? தலைவர் எப்படிப்பட்டவர்? நம்மோடு பிரியா வாழ்க்கையுடையவரா அல்லது பிரிந்து பிரிந்து நலி செய்யும் இயல்புடையவரா? காட்சிக்கு எளியவரா? அல்லது அரியவராய் மாறித் தீங்கிழைப்பவரா? என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்திருந்தால் இன்று இத்தகைய துன்பம் நேர்ந்திருக்குமா? செய்த வினைக்கு ஏற்றவன்றோ பயன் விளையும்? அன்று ஓடிக் கண்டு மகிழ்ந்த கண்கள் இன்று சோர்ந்து வாடி வருந்துவது எற்றுக்கோ? 'இந்தச் செயலை ஏன் செய்தோம்' என்று பின்னர் இரங்கும்படி செயல்படலாமா? அப்படிச் செயல்படினும் மீண்டும் அவ்விரங்குதலைச் செய்வது அறிவுடைமையாகுமா? இவைகளை உணராது கண்கள் அலமருவதேன்?"

"இந்தக் கண்களின் செயலைக் கண்டு எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது சிறிதாவது நாணமிருக்க வேண்டாம்? இவற்றை யார் திடுமென அவரை ஓடிக் காணும்படி பணித்தது; இன்று யார் இவற்றை அழும்படி கூறியது? தகாத செயலைத் தாமே செய்துவிட்டு இன்று தாமே நீர் பெருக்கி ஓலமிடுவதேன்?"

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே விளையும்" என்பர் பெரியர் இவ்வுரை என் கண்களுடைய செயலால் உண்மையாயிற்று. பிரிந்தாலும் விரைந்து திரும்பி வந்து கூடுவாரைக் காட்டியிருந்தால இக்கொடிய பிரிவு நோய் நிலைத்திராது அழிந்திருக்கும்; அங்ஙனமின்றிப் பிரிந்தால் பின் கூடாமையுடையாரையன்றோ என் கண்கள் காட்டி அக்கொடியநோயை என்பால் நிலைநிறுத்திவிட்டன

# மருதத் திணையும் வள்ளுவரும்.

மருதத்திணையைச் சங்கநூல்களாகிய அகநானூறு முதலியவை கூறும் முறை வேறு; திருவள்ளுவரின் நூல் கூறும் முறை வேறு; திருவள்ளுவர் கூறும் மருதத்தில் பரத்தை என ஒருத்தி இல்லை; தலைவன் பரத்தையை நாடிச் செல்வதும் இல்லை. மற்ற நூல்களில் பரத்தையும் உண்டு; பரத்தையோடு தலைவன் களிப்பதும் உண்டு; பொருள் காரணமாக மகளிர் சிலர், ஒழுக்கத்தை விற்பதும் கூடாது. ஒழுக்கமற்ற அந்த மகளிரை ஆடவர் நாடுவதும் கூடாது என்று பொருட்பாலில் வன்மையாகக் கடிந்தவர் திருவள்ளுவர்; வரைவில் மகளிர் என்ற அதிகாரம் வள்ளுவரின் சீர்திருத்தத்தை விளக்குவது; அக்காலத்து நூல்களில் எல்லாம் இடம் பெற்று வந்த பரத்தையர்க்குத் திருக்குறளில் நல்ல இடம் இல்லை; வேண்டா என்று கடியப்படும் இடமே கிடைத்தது. ஆதலின், திருவள்ளுவர் மருதத் திணைக்கு முன்னோர் வகுத்தோதிய இலக்கணத்தையும் புறக்கணித்துப் பரத்தையர்க்குக் காமத்துப்பாலில் இடம் இல்லாமல் செய்தார்; நூலோர் மரபையே கடந்து புது வழி வகுத்தார்.

—டாக்டர். மு. வ.

—[o]—

எனக்குத் துன்பம் விளைத்தவர் தாம் துன்புறாமல் இருக்க முடியுமா? அதனால்தான் இன்று அவை நீர்வற்றி உலர்ந்து துன்புறுகின்றன; தூங்கவும் மாட்டாது துயர் கூர்கின்றன நன்று வாடட்டும். என்னை நலி செய்தார் இன்னும் நன்றாக வருந்தவேண்டும் வருத்தினவர் வருந்தினால்தான் வருத்தப்பட்டவளாகிய நான் மகிழ்வேன்.”

“இவை யார் யாரையோ நோக்கியிருக்கின்றன. அவர்களை நோக்கியதுபோலவே இவரையும் நோக்கியிருந்தால் நான் பிழைத்திருப்பேன். அவையும் பிழைத்திருக்கலாம் ஆனால் அவரைக் கண்டவுடனே வேறு இவை மயங்கிவிட்டன! ஏதோ காணாத ஒன்றைக் கண்டது போல் மீண்டும் மீண்டும் பார்த்தன—விரும்பி விரும்பி நோக்கின. அதோடு நின்றிருந்தால் இந்தத் தீங்கு விளைந்திராது அவரை இடைவிடாது நோக்கின அவரோடு இணைந்துவிடும்படி பார்த்தன. இப்படிச் சிறிதும் நினைந்து பாராது விரைந்து அவரிடம்

(தா சா மாணிக்கம் B A Hons)

மயங்கி விழுந்துவிட்ட கண்கள் வருந்தி வருந்தி வாடட்டும்; மேலும் அழுதற்கு நீரற்றுத் துன்புறட்டும்!”

“நம்மை விலழந்து போற்றுகின்றவரையன்றோ நாம் விழைந்து போற்றவேண்டும் உதட்டில் உறவும் உள்ளத்தில் பகையும் உடையவரோடு நட்புக் கொள்ளலாமா? தம்மை விரும்பாது எங்கோ சென்றுவிட்டவரைத் தாம் விரும்பும் மக்களை இந்த உலகத்தில் கண்டதுண்டா? இல்லையெனில் என் கண்களைப் பாருங்கள். அவற்றைச் சிறிதும் நினையாது பிரிந்து சென்று வாட்டி வதைத்தவரைத் தேடித் தேடி அலைந்து வருந்துவதைக் காணுங்கள்.”

“காதலர் வாராக் காலத்து இப்படி வருந்துகின்றன; காதலர் வந்துவிட்டாலும் அவர் தம்மைப் பிரிந்துவிடுவாரோ என்ற எண்ணத்தால் தூங்காது துயர் பெருக்குகின்றன; ஐயகோ! இக்கண்கள் செய்யும் கொடுமைக்கும் அளவுண்டோ?”

“தலைவரை எனக்குக் காட்டி இத் துன்பத்துக் காளாக்கின. இன்று நான் அது பொறுக்கவொண்ணாது உழல்கின்றேன். இதை ஊரார் அறியாது இருக்க வேண்டும் என்பது என் விருப்பம். அப்படி ஊர் அறியாது என்னுள்ளேயே துன்பத்தை அடக்கி வைத்துக்கொள்ள என்னால் முடியும். அந்தோ! இந்தக் கண்கள் அம் முயற்சியையும் கெடுத்துவிடுகின்றனவே; ஊராருக்குப் பறை அறைந்து என் துன்பத்தை அறிவிக்கின்றனவே! என் செய்வேன்.”

கண்களைக் குற்றவாளியாக்கி இழித்தும் பழித்தும் பேசிச் சபிக்கும் (திருவள்ளுவர்) தலைவியைக் காண்பீர்கள். இவ்வண்ணமே அவள் நெஞ்சைக் குற்றவாளியாக்கிப் பேசுவதையும் காணலாம். கண்டு மகிழுங்கள். ‘முல்லைக் கொடி’ விரைவில் இதழ் விரிப்பாள்; அதையும் சுவைத்துக் களியுங்கள்.

## யார் அவர்?

திருவள்ளுவர் தமிழ் நாட்டில் தோன்றியவர்; திருக்குறள் என்ற நூலை யாத்தவர். இங்கே, அவர் தோன்றிய நாட்டுக்குச் சிறப்பளிப்பதா? அல்லது அவர் யாத்த நூலுக்குச் சிறப்பளிப்பதா? நூலுக்குச் சிறப்பளிப்பதே சால்பு. ஏன்? திருக்குறள் தமிழ் நாட்டுக்குமட்டும் பயன்படுவதாய் அமையவில்லை. அஃது உலகுக்குப் பயன்படுவதாய் அமைந்துள்ளது. நாட்டினும் உலகம் பெரிதன்றோ?

உலகுக்கென்று ஒரு நூலை அளித்த ஒருவரை ஈன்ற பெருமை தமிழ் நாட்டுக்கு உண்டு. இது குறித்துத் தமிழ் மக்கள் இறும்பூ தெய்தலாம்; இறுமாப்படையலாம். ஆனால் திருவள்ளுவரைத் தமிழ் நாட்டளவில் கட்டுப்படுத்தலாகாது. அது தவறாகும். உலகுக்கென்று ஒரு நூலை அளித்த ஒருவரை ‘உலகவர்’ என்று கோடலே சிறப்பு. —திரு. வி. க.

**Phone 55034 Tel. Enkayam**

**கைத்தறி ஆடைகளில்**

**சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட் மார்க்**

**பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்**

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1

# வழிகாட்டும் வள்ளுவம்.

"இவ் வாழ்க்கை ஒரு சூழ்ச்சிப் பாதை! மேடுபள்ளங்களும், கல்லும் முள்ளும் மலிந்து கிடப்பது. செல்வமுடையார் எல்லாமுடையார்; அஃதிலார் எதுமிலார்" என்றெல்லாம் எண்ணி, உள்ளம் இடிந்து உட்கார்ந்துவிட்டான் மனிதன்; அன்னவன் தன்மை நோக்கிச் சிரிக்கிறார் வள்ளுவர். நடுக்கடலில் செல்லும் வழியறியாது தயங்கிநிற்கும் மாக்கலத்திற்குக் கலங்கரை விளக்கம் கண் கண்ட கடவுளாகக் காட்சியளிப்பதைப் போன்று உள்ளம் உடைந்த மனிதனுக்கு வள்ளுவம் ஒரு கலங்கரை விளக்கமாய்த் திகழ்கின்றது. வள்ளுவர், "நண்பா! எத்தகைய இடையூறு வரினும், வானமே இடிந்து வீழ்ந்த போதினும் உளம் கலங்காதே. முயற்சி செய்; இறுதியில் வெற்றியைக் காண்பாய்" என்று அறை கூவி அழைக்கின்றார். "முயற்சி திருவினை ஆக்கும்" என்று மொழிந்து அவன் உள்ளத்திற்கு ஊக்கம் ஊட்டுகின்றார்:

ஊக்கப்பட்ட மனிதன் வீறுகொண்டெழுகின்றான் "தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே வேளாண்மை என்னும் செருக்கு" என்ற குறளின் குரல் அவன் காதில் மேலும் ஒலித்து ஊக்குவிக்கின்றது, உழைக்கிறான்; உழைக்கிறான்; நெற்றி வியர்வை நிலத்தில் சொட்ட உழைத்துப் பொருள் திரட்டுகிறான். வாழ்க்கைப் பாதை இப்போது அவனுக்குக் காடு முரடாகத் தோன்றவில்லை. அழகிய "தார்" சாலையாகக் காட்சி அளிக்கின்றது. மேலும் மேலும் பொருள் குவிக்க முனைகிறான். அவனது பேராசை கண்ட வள்ளுவர், ஒரே ஒரு சான்று, தக்க சமயத்தில் அவனுக்குக் கூறி அறிவு கொளுத்துகிறார்.

"அப்பா, கூத்தாடுவார் கூட்டத்தினைக் கண்டிருப்பாய்; பறை யறைந்து கூட்டத்தைச் சேர்க்க முற்படுகிறான், கூத்தாடி, கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்ந்து, பெரியதிரளாகி விடுகின்றது. கூத்தாடி தன் திறமையை யெல்லாம் பயன்படுத்திக் கூத்தாடுகிறான். அவனோடு மிக நெருங்கிய தொடர்புள்ளதுபோல் அப்போது கூட்டம் அவனை உற்றுப் பார்க்கிறது. ஆயின், அவன் கூத்தாடி முடிந்ததும், அங்கே என்ன நடக்கிறது? ஒருவராவது அங்கு நிற்கின்றனரா? சேரும்போது கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்ந்து, போகும்போது அப்படியே கலைந்து விடுகின்றனர். அத்தகைத்துதான் அப்பா செல்வமும்;

"கூத்தாட்டு அவைக் குழாத்
 தற்றே பெருஞ் செல்வம்
போக்கும் அது விளிந்தற்று"

மனிதன் உள்ளத்தில் அறிவு பளிச்சிடுகின்றது. உண்மை, உண்மை உண்மை என்று உரக்கக் கூவுகின்றான், அன்று முதல் பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்கும் தொழிலைக் கைவிடுகின்றான். அதற்கு மாறாக, புகழ் சேர்க்கும் பணியில் ஈடுபடுகின்றான். ஒன்றா உலகத்துப் பொன்றாது நிற்பது புகழன்றோ?

T N. அருச்சுனன்.

அவனது இல்வாழ்க்கை திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது, "பிறன் மனை நோக்காத பேராண்மை" அவனது மறைமொழி (தாரக மந்திரம்.) மக்கட்பேறு அவன் கருதும் உயர்ந்த செல்வமாகத் திகழ்கின்றது. மற்றச் செல்வங்கள் "ஆகுல நீர" ஆகிவிடுகின்றன. மனத்துக்கண் மாசிலனாக வாழ்க்கை நடாத்த முற்படுகின்றான். அவனது பண்பாகிய வீடு, அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம் வாய்மை என்ற ஐந்து உரமான தூண்களால், தாங்கப்பட்டு நிற்கிறது.

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ டைந்து சால்பு ஊன்றிய தூண்" என்பது குறளன்றோ? எல்லா அற நெறிகளையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று நினைக்கிறான். எதை விடுவது? எதைக் கடைப் பிடிப்பது என்று தயங்குகிறான். அப்போது வள்ளுவர்,

"ஒன்றாக நல்லது
 கொல்லாமை, மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று"

என்ற மறைமொழி கூறி அவனைத் தெளிய வைக்கிறார். கொல்லாமையை முதலில் மேற்கொள்கிறான். அவனை நோக்கிக் கை கூப்பி எல்லா உலகும் தொழுகின்றது. அன்புடையார் எல்லாம் உடையார் அன்றோ? அடுத்துப் பொய்யாமையை மேற்கொள்கிறான். "சொல்லுதல் யார்க்கும் எளிய" என்பதை அப்போதுதான் அவன் உணர்கிறான். என்றாலும், விடாமுயற்சியால் பொய்யாமையைக் கடைப் பிடிக்கிறான்.

பொய்யாமை பொய்யாமை
 ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.
எல்லா விளக்கும்
 விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு

என்ற மறைமொழிகளை அவன் நன்கு அறிந்தவனல்லவா?

இவ்வாறு அவனது வாழ்க்கைப் படகு செல்கின்றது. உலகில் மக்கள் நிலையாமையைக் காண்கிறான்.

"நெருநல் உளனொருவன்
 இன்றில்லை என்னும்
பெருமையுடைத்து இவ்வுலகு"

என்ற மறைமொழியை அவன் மறந்துவிட்டான் போலும்! கண் கலங்கி, மதிகலங்கித் திகைக்கிறான், உற்றுழி உதவும் நண்பராய் வள்ளுவர் அங்கே காட்சி யளிக்கிறார்:

Telegrams: "RAMBROS'
N. Ramu Bros.
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

"இடுக்கண் வருங்கால்
நகுக; அதனை
அடுத்தூர்வது அஃது
ஒப்பது இல்"

என்ற வெல்லுஞ் சொல் அவனை இவ்வுலகுக்குக் கொண்டுவருகின்றது.

மனிதனுக்கு வேண்டிய கல்வியை, அவன் முனைந்து பெற, முயல்கிறான். முயன்றால் முடியாததும் உண்டோ? கற்றனைத்து அவன் அறிவு ஊறுகின்றது. தான் கற்ற கேடில் விழுச் செல்வமாம் கல்வியால் உள்ளம் பண்பு அடைகிறது. உயர்ச்சியடைகிறான்.

"மாந்தர்தம் உள்ளத் தனையது
உயர்வு" அன்றோ?

சாந்துணையும் கற்கும் வழிக்கு அடிகோலுகிறான், தவலரும் தொல் கேள்வித் தன்மை உடையாரை நாடுகின்றான், உவப்பத் தலைக் கூடி உள்ளப்பிரியும் தொழில் அவனுக்கு வழக்கமாகி விடுகின்றது.

அமைதியாகச் சென்ற அவனது வாழ்க்கைப் படகு இறுதிக் கட்டத்தை அடைகிறது. அவனது மனைத்தக்க மாண்புடையாள்—தற்காத்துத் தற்பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்வில்லாளாகிய—மனைவியும் உலகில் மறைகிறாள்.

"நாச் செற்று விக்குள்
வாராமுன்னம் நல்வினை
மேற்சென்று செய்யப்படும்"

உள்நாக்கு உள்ளே சென்று அடைவதன் முன்னே, எல்லா நல்வினைகளையும் ஆற்றியாகிவிட்டதா என்று கேட்டுக் கொள்கிறான். "ஆற்றி விட்டாய்" என்று விடை வருகின்றது. அவனது ஆன்மா வள்ளுவரை வாழ்த்தி, "குடம்பையினின்று பறக்கும் புள்" போன்று பறந்து சென்றுவிடுகின்றது.

வள்ளுவம் இவ்வண்ணம் பிறப்பு முதல் இறப்புவரை வழிகாட்டியாக அன்றும் இன்றும் விளங்கி வருகின்றது, என்றும் விளங்கும் என்பதிலும் ஐயமில்லை.

# முப்பால் நுட்டம்

திருவள்ளுவர் திருக்குறள் ஒரு வாழ்க்கை நூல். அதனாலேயே அது மற்ற நூல்களைவிட உலகப் பொதுமையும் பெருமையும் மிக்குற்றுத் திகழ்கின்றது.

அந்நூலைத் திருவள்ளுவர் மூன்று பால்களாக வகுத்து இயற்றியிருக்கிறார். அதனால் அது 'முப்பால்' என்னும் பெயரையும் பெற்றிருக்கிறது.

வாழ்க்கையைப் பற்றிக் கூறும் நூலை வள்ளுவர்பிரான் மூன்று பிரிவாகப் பிரித்துக் கூறியிருப்பதனால், வாழ்க்கையும் அம் மூன்று கூறுகளிற் பிரித்துணர்ந்து நடக்கத்தக்கதாக இருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும்.

கலைவாழ்வு பொருள் வாழ்வைவிட உயர்ந்ததாக இருக்கிறது. பொருளால் வரும் இன்பத்தைவிடக் கலையால் வரும் இன்பம் உயர்ந்ததாகவும், பொருளால் வரும் துன்பங்களை மறத்தற்கு உதவியாகவும் இருக்கிறது.

வாழ்க்கைக்குப் பொருள் வேண்டும்; ஆனால் அதுவே போதுமானதன்று; கலையும், அருளும்கூட வேண்டியிருக்கின்றன; அவற்றைப் பெறுதற்காகவும் பொருள் வேண்டியிருக்கிறது, ஆதலின் அதனை வாழ்க்கையின் அடிப்படை என்று கொள்ளலாமே ஒழிய அதுவே வாழ்க்கையின் நோக்கம் என்று கொள்ளக்கூடாது.

மக்கள் கூடி வாழும் இயல்புடையவர்கள்; ஆகவே, அவர்கள் இயற்கை அரண்களுக்குட்பட்டு அவரவர் தாய்மொழி அமையும் நாட்டில் அமைதியாக வாழ முற்படுவார்கள். அப்படி வாழும் மக்களின் அடிப்படை நலமாகிய பொருள் நலம் அரசியலால் காப்பாற்றவும் வளர்க்கவும் படும்.

ஆகவின், திருவள்ளுவர் பொருட்பாலில் அரசினைப் பற்றியும் அரசியலைப் பற்றியும் விரிவாகக் கூறியிருக்கிறார். உடலில்லாத உயிரின் இருப்பு விளங்காதது போலப் பொருளில்லாத மக்களின் வாழ்க்கையும் விளங்காது. வாழ்க்கைக்குப் பொருள் அவ்வளவு முதன்மை! வாழ்க்கை விளக்கம் என்பது பொருளோடு நில்லாமல் மேலும் உயர்ந்துபோவது. அவ்வுயர் நிலைக்குப்போகப் பொருள் பயன்படவேண்டும்.

பொருள் நலத்துக்கு அடிப்படையாக இருக்கவேண்டிய தகுதிகள் இறைமாட்சி, கல்வி, கேள்வி, அறிவுடைமை, குற்றங்கடிதல், பெரியாரைத் துணைக்கோடல், சிற்றினஞ்சேராமை என்று திருவள்ளுவர் தெரிவிப்பதை இக்கால உலகம் நன்றாகக் கருதிப் பார்க்கவேண்டும்.

மக்களாட்சியில்- இறைமாட்சி என்பது மக்கள் மாட்சியே ஆதலின் அதனை வளர்க்கத்தக்க கல்வியை மக்களுக்கு ஊட்டும் முயற்சியில் அரசியலார் தலைநிற்கவேண்டும்.

கலை என்பது ஒருவகை இன்ப உணர்ச்சி; பொருட்செழிப்பில் விளைவது; பல்வேறு இயற்கைப் புறப் பொருள்களிலும் கல்வி கேள்வி முதலிய அகப் பொருள் வழியில் பெற்ற கருத்துக்களிலும் ஓர் ஒழுங்கைக் காண்பதாலும், பொருளை வழங்கும் உயிர்களின் குண நலங்களிற் படிவதாலும் உண்டாவது; மென்மை நுண்மை முதலிய உணர்ச்சிகளை ஊட்டுவது; உயிர்களின் உள்ளத்தைத் தொட்டு இழுக்கக்கூடியது; உயிர்களின் உள்ளத்துணர்ச்சி

கலை எழுப்பவும் காட்டவும் வல்லது.

கலை உணர்ச்சிகளை வடிப்பது என்று மேலே குறிப்பிட்டதற்கேற்பக், காமத்துப்பாலில் இணைவிழைச்சு பற்றி ஏதும் கூறாமல், காதலர்களின் உள்ளத் துணர்ச்சிகளையே பலபட விரித்து வடித்துக் கூறுதலை நுணுகியறிதல் வேண்டும்.

சுருக்கமாகக் குறிப்பிட்டால் பொருட்பாலில் வரும் அகப் புறச் செழுமை காமத்துப் பாலால் மலர்கிறது எனலாம்.

இனி, அச் செழுமை அறத்துப் பாலில் கனிவதையும் சிறிது காணலாம்.

திருவள்ளுவர் பொருட்பாலிலும் இன்பத்துப்பாலிலும் வாழ்க்கையின் கூறுகளைப்பற்றிய பொதுவான பல கருத்துக்களையே விளக்குகிறார். அறத்துப் பாலில் வாழ்க்கை முழுவதையும் நடத்தவேண்டிய முறைகளை மிக விளக்கமாகப் பாகுபாடு செய்து தெரிவிக்கிறார்.

கல்வியும் பொருளும் தேடுகிற காலத்தில் ஒருவனை வாழ்க்கை நடத்துகிறான் என்று சொல்வதில்லை. அப்படியே ஒருத்தியைக் காதலிக்கிற காலமும் வாழ்கிற காலமாகாது........ கல்வி முயற்சியும் பொருள் முயற்சியும் மதிக்கத் தக்க நிலைக்கு வந்தபின் காதலிக்கிற ஒருத்தியை மணந்துகொண்டு ஓரிடத்தில் தங்கி வாழ்கிற காலத்தையே வாழ்க்கைக் காலமாக உலகம் ஒப்புக்கொள்ளுகிறது.

அன்பின் அடிப்படையில் பயில்கின்ற பகுதி, சிறப்பாக இல்வாழ்க்கைக்கு வேண்டிய பொருள் முயற்சியோடு இருக்க வேண்டியதாக இருத்தலின் 'இல்லறம்' என்றும், அருளின் அடிப்படையில் பயில்கின்ற பகுதி, பொருள் முயற்சி அவிந்திருக்கவேண்டியதாக இருத்தலின் அதனைத் 'துறவறம்' என்றும் குறிப்பிடுகின்றார். முன்னதிற் புற முயற்சி மிகுதியாக இருத்தலின் அது ஈகையையும் புகழையும் ஈட்டித் தருமென்றும், பின்னதில் அக உணர்ச்சி மிகுதியாக இருத்தலின் அது மெய்யுணர்வையும் அவா அற்ற நிலையையும் கொடுக்குமென்றும் புலப்படுத்துகின்றார்.

ந. ரா. ஆடலரசு.

எனவே, இல்வாழ்க்கையில் மனைவி மக்களுடனிருந்தே முன்னால் தேடிக்கொண்ட பொருள் கலைச் செழிப்புக்களைக் கொண்டு முதலில் தொடர்புடையவர்கள் மாட்டுச் செலுத்தும் அன்பை நாடு மொழி சமயம் என்னும் முறைகளில் வளர்த்துப் படிப்படியே அதனைத் தொடர்பற்றவர்களிடத்தும், மன்பதை முழுதக்கும் செலுத்தும் அருளுணர்ச்சியாக மாற்றிக் கொள்ளும் பெரு வாழ்க்கைக்கு உயர்தல் வேண்டும் என்பதே திருவள்ளுவர் காட்டும் வாழ்க்கைப் பாதையாகும்.

சுருக்கமாகக் குறிப்பிட்டால், உள்ளத்துணர்ச்சியை மெய்ம்மையிற் சேர்த்து மற்றவற்றிலுள்ள அவாவை அறுக்கும் கல்வி கலை அருள் என்பனவே திருக்குறளின் முப்பால் நுட்பம் எனலாம். அவற்றிற்குத் துணையான பொருளும், காதலும், இல்வாழ்க்கையும், மக்கட்பேறும் பெற்றுத் திகழும் வாழ்க்கையே நல்வாழ்க்கை எனலாம். இது வாழ்க்கை மறையின் நோக்கம், நுட்பம்.

# குறளின் குறிக்கோள்

## உலகம் ஒரு குலமாதல்

திருவள்ளுவர் கலை முப்பாலால் ஆகியது. அவை அறத்துப்பால், பொருட் பால், காமத்துப்பால் என்பன. 'உலகம் ஒரு குலம்' என்பதற்குக் கால்கொள்ளும் இடம் காமத்துப்பால். அப் பாலுக்கு, உரம் அளிப்பது பொருட்பால். இரண்டையும் ஒழுங்கில் இயக்கிக் காப்பது அறத்துப்பால். மூன்றன் குறிக்கோளும் 'உலகம் ஒரு குலமாதல் வேண்டும்' என்பதே.

* * *

# திருவள்ளுவர் நெறி

வாழ்க்கைக் கலையை உலகுக்கு உதவினோர் பலர். அவருள் குறிக்கத் தக்க பண்டைச் சான்றோர் ஆதிமனு அரிஸ்டாட்டல் திருவள்ளுவர் முதலியோர். ஆதிமனுநெறி செவ்வனே செழித்து வந்தது. இடைநாளில் மனு என்ற பெயரால் தோன்றிய சிலர் பழைய செந்நெறிக்குக் கேடு சூழ்ந்தனர். அவரால்பிறப்பில் உயர்வுதாழ்வு, பெண்ணடிமை, தீண்டாமை, கண்மூடி வழக்கங்கள் முதலியன கற்பிக்கப் பெற்றன. அவை தூறுகளாய்ச் செந்நெறியை மறைத்தன. இவ்வாறு ஆதிமனுநெறி குலைந்தது. அரிஸ்டாட்டல் வழியில் பொறாமை, நாட்டாசை, சுரண்டல், இகல், போர், கொலை முதலிய கொடுமைகள் மலியலாயின. இம்மலிவால் அரிஸ்டாட்டல் வழி இரத்த ஆறாகியது. திருவள்ளுவர் நெறியோ அறத்தை அடிப்படையாக் கொண்டது; அறத்தில் மாசுபடிதல் அரிதன்றோ? அதனால் திருவள்ளுவர் நெறி சிதைவுபடவில்லை. அறத்தை அடிப்படையாக் கொண்ட எதுவும் சிதைவுபடாது.

—திரு. வி. க.

—[O]—

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)